# OS.No.74/2024, Dated 04.03.2026

The witness sworn under Oaths Act 1969 on this the day of 04th day of March 2026.

**வா.சா.1 – ஏழுமலை த/பெ பெருமாள் வரவழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நானும் சாமிக்கண்ணுவும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் தான். சாமிக்கண்ணுவின் தகப்பனார் சின்னப்பா பற்றி எனக்கு தெரியும். அவருக்கு 3 மகன்கள் ஆவர். அவர்கள் சாமிக்கண்ணு, சம்பத் மற்றும் நடராஜன் ஆவர். இதில் சாமிக்கண்ணு மூத்தவர் ஆவார். எனவே, குடும்பத்தில் நடந்த பாக்ப்பிரிவினை விபரங்கள் அவருக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினையின்போது வீடும் மின் இணைப்பும் நடராஜனுக்கு ஒதுக்கினார்கள். காலி மனையில் 100 சதுர மீட்டர் மட்டும் தான் நடராஜனுக்கு கொடுத்தார்கள் என்றால் சரிதான். மீதமுள்ள இடத்தில் சாமிக்கண்ணுவிற்கு 200 சதுர மீட்டரும், சம்பத்துக்கு 200 சதுர மீட்டரும் ஒதுக்கினார்கள் என்றால் சரிதான். சம்பத்தோ அல்லது சாமிக்கண்ணோ அந்த 200 சதுர மீட்டர் தவிர கூடுதலாக கொடுத்திருந்தால் அது செல்லாது என்றால் சரிதான். நடராஜன் எனக்கு கிரையம் கொடுக்கும் போது சாமிக்கண்ணுவும் அதில் கையொப்பம் போட்டிருந்தார். தேசிங்கு கூடுதலாக கிரையம் வாங்கிய ஆவணத்தை ரத்து செய்யக்கோரியும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதனால் நான் தாவாப்படி தீர்ப்பாகும்படி கேட்டுக்கொள்கிறேன் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S
Digitally signed by SARANYA S
Date: 2026.03.04 15:59:30 +0530

சார்புநீதிபதி

வந்தவாசி